1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அது இந்த அரசின் கவனத்திற்கு வந்தாக வேண்டும். லீகல் அசிஸ்டென்ட் என்பவர்கள் அந்த வங்கியின் ஊழியர்கள் தான என்பதை முதலில் முடிவு செய்யவேண்டும். அந்தப் பிரச்னையை ஆராய்ந்து முடிவு செய்யப்படுமானல், அந்த வங்கியின் ஊழியர்கள் என்று சொல்லப்படுவார்களானல், அப்போது அவர்களுக்கு ஏதாவது கோரிக்கைகள் இருக்குமானல் அதை கவனிக்கும் பொறுப்பு என்னுடையது அல்ல. அது தொழிலாளர் நல அமைச்சர் செய்ய வேண்டியது.

சென்னை சமஸ்கிருத கல்லூரிக்கு மானியம்

*** 141 வின—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மயிலாப்பூரில் உள்ள சமஸ்கிருத கல்லூரிக்கு தமிழ்நாடு அரசு மானியம் ஏதேனும் வழங்கியிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். ஆண்டுக்கு சுமார் 8,000 ரூபாய் அளவில் மானியம் வழங்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, வடமொழியாகிய சமஸ்கிருதத்திற்கு அளிக்கப்படும் மானியத்தைப் போல், தமிழ் அல்லாத பிற மொழிகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகளுக்கு அரசு ஏதேனும் மானியத் தொகை வழங்குகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பிற மொழி என்கிற வகையில் தமிழ் மொழிக்குத்தான் பல கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிற்கு மானியங்கள் தரப்படுகின்றது. வேறு மொழிக் கல்லூரிகள் இருப்பதாகத் தெரியவில்லை. சமஸ்கிருதக் கல்லூரிக்கு ரூ. 8,000 வழங்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Tamil Nadu has produced great Sanskrit scholars like Vedantha Desika and Appayya Dikshithar. Kanchipuram was the centre of Sanskrit learning for centuries with international reputation. Sanskrit has given us much, and has absorbed, assimilated a lot from us. The affinities between Sanskrit and Dravidian languages are unavoidable and inseparable. So may I know from the Hon. Minister for Education whether he would grant more funds for the encouragement of this language?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நாம் அளிப்பது மட்டுமல்லாமல், மத்திய அரசும் மானியம் அளித்து வருகிறது. சமஸ்கிருத மொழியை வளர்ப்பதற்காக மத்திய அரசின் சார்பில் ஒரு வாரியம் அமைக்கப்பட்டு, அது நிதி உதவி வழங்கி வருகிறது. அவர்கள் அளிக்கும் நிதி தவிர, புத்தகங்கள், கருவிகள், தளவாடங்கள் வாங்குவதற்கும் மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அதையும் சேர்த்து, மாநில அரசும் தேவைப்படுகிற அளவுக்கு மானியம் வழங்குகிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சமஸ்கிருதம் தவிர வேறு அன்னிய மொழி இருப்பதாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். அரபு மொழிக் கல்லூரிகள் இருக்கின்றன. வேலூரில் பாக்கியாத்து சாலிஹா கல்லூரி, நீடூரில் அரபிக் கல்லூரி, லால்பேட்டையில் அரபிக் கல்லூரி இருக்கின்றது. அவற்றிற்கு மானியம் கேட்டால் கொடுக்க அரசு முன் வருமா? அது பற்றி பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது பற்றிய விவரம் இல்லை. அதற்கு இப்போது மானியம் வழக்கப்படுகிறதா இல்லையா என்று தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் அதன் முழு விவரம் அறிந்து சொல்ல லாம்

திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, உயர் தனிச் செம்மொழி என்ற அடிப்படையிலும், இந்தியக் கலாசாரத்தின் பெட்டகமாக விளங்குகிறது என்ற அடிப்படையிலும், சமஸ்கிருதத்திற்கு தனிச் சலுகை கொடுக்க மைய அரசாங்கம் முன்வந்திருக்கிறது.. அந்த அடிப்படையில் தமிழும் ஒப்புக் கொள்ளப்படுகிற காரணத்தால், தமிழுக்கும் அது போல் நிதி உதவி தர வேண்டுமென்று நமது அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது தனியாக கவனிக்கப் படவேண்டிய ஒன்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விகள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சென்னை மைலாப்பூரில் உள்ள சமஸ்கிருதக் கல்லூரிக்கு எந்த அடிப்படையில் மானியம் கொடுக்கிறார்கள். அங்கே படிக்கும் பட்டதாரிகள் எப்படிப்பட்ட வேலைகளுக்கு அனுப்பப் படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?